# புனித தோமையார்

## (இந்தியாவின் திருத்தூதர், மறைசாட்சி)



*Apostle St. Thomas*

**நினைவுத்திருநாள் : ஜூலை 3** **இறப்பு : 21-12-72**

திருத்தூதர் **புனித தோமா** (அ) **புனித தோமையார்**.

**இயேசு உயிர்த்துவிட்டார் என மற்ற திருத்தூதர்கள் சொன்னதை முதலில் நம்ப மறுத்ததால் இவர் 'சந்தேக தோமா' (Doubting Thomas) என்ற பெயராலும் அழைக்கப்படுகிறார்.**

உயிர்த்த ஆண்டவரைக் காண்பதற்கு அவர் போட்ட நிபந்தனை அவருக்கு ஒரு பட்டப் பெயர் சூட்டப்படக் காரணமாயிற்று. **"ஐயப் பேர்வழி"** என்றே இன்றுவரை உலகம் அழைக்கின்றது. ஆனால், **"அவர் நீரே என் ஆண்டவர். நீரே என் கடவுள்"** என்று விசுவாச அறிக்கை வெளியிட்டதுபோல வேறு யாரும் அவ்வளவு மனம் விட்டு அறிக்கையிடவில்லை. இவர் நமக்கு ஓர் உருக்கமான, விசுவாசம் நிறைந்த செபத்தை அமைத்து கொடுத்து, இச்செபத்தை நாம் பொருள் உணர்ந்து சொல்லும் போதெல்லாம் நமது பற்றுறுதி மெருகேற்றப்படுகிறது. **"காணாமல் நம்புவோர் பேறுபெற்றோர்"** என்று கூறிய உயிர்த்த ஆண்டவர், உலகமுடியும் வரை தம்மில் விசுவாசம் கொள்வோர் பேறு

பெற்றோர் என்று தெளிவுபடுத்துகிறார். நாம் இந்த விசுவாசக் குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பது ஆறுதல் அளிக்க வேண்டும்.

தோமா ஆண்டவரிடம் ஒரு தனிப்பற்றுதல் கொண்டிருந்தார். நாமும் ஆண்டவருடன் சென்று அவரோடு சாக வேண்டியிருந்தாலும் தயாராய் இருப்போம் என்று கூறியவர். தோமா ஆண்டவரின் விண்ணேற்பிற்கு பிறகு சென்று போதியுங்கள் என்ற அவரின் கட்டளையை நிறைவேற்ற புறப்படுகிறார். யுசிபியுஸ் என்ற புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர் கூறுகிறார். "அப்போஸ்தலர் யூதா ததேயுவை எடெஸ்ஸாவிலிருந்த அப்கர் என்ற அரசனுக்கு திருமுழுக்கு கொடுக்க அனுப்பியபின் தமக்கென பார்த்தியா மீட்ஸ், பெர்ஷியா இன்னும் பல அண்டை நாடுகளை தெரிந்துகொண்டு மறைபரப்பு பணியாற்றினார். தோமா. அப்போதுதான் இந்தியா வந்தார். "தோமாவின் பணிகள்" என்ற ஒரு நூல் கி.பி. 3ஆம் நூற்றாண்டின் முதல் கால் பகுதியிலேயே மக்களிடம் இருந்ததாக ஆதாரம் இருக்கிறது.

இந்தியாவில் இயேசுவின் நற்செய்தியை முதன்முதலில் அறிவித்தவர் இவரே என்று பழங்கால கிறிஸ்தவ மரபும், ஏடுகளும் சான்று பகர்கின்றன. கேரளாவில் வாழும் தோமையார் கிறிஸ்தவர்களும் இதற்கு சான்றாக உள்ளனர்.

கொண்டோபெர்னஸ்(Condoberns) அல்லது குடுப்பாரா(Cudupara) என்ற மன்னரது ஆட்சி 46 ல் பெஷாவர் வரை பரவிக்கிடந்தது. பஞ்சாபிலிருந்து கொச்சின், திருவிதாங்கூர் சிற்றரசு வரைக்கும் பரவியிருந்தது. அதிலிருந்து "புனித தோமாவின் கிறிஸ்தவர்கள்" என்றே இப்பகுதியினர் அழைக்கப்பட்டு வந்தனர். தங்களுடைய திருவழிபாட்டுக்கு "சீரியக்" என்ற மொழியையே அன்று முதல் இன்றுவரை பயன்படுத்தியதோடல்லாமல் இன்று வரை "சீரியன் கிறிஸ்தவர்கள்" என்றும் அழைக்கப்படுகிறார்கள். சீரியக் மொழி உறுதியாக பெர்ஷியா, மெசப்பொத்தேமியா பகுதிகளிலுருந்து இறக்குமதியானது.

தோமா முதன் முதலில் கிராங்கனூர் கடற்கரையை வந்தடைந்தார் எனவும், மலபாரில் மட்டும் 7 ஆலயங்கள் எழுப்பினார் எனவும், பின்னர் குமரி கடற்கரை வழியாக சென்னை வந்தடைந்தார் எனவும், அங்கே பலரையும் மனந்திருப்பிய பின் "சிறிய மலை" என்ற பெயர் கொண்ட இடத்தில் குத்திக் கொல்லப்பட்டார் எனவும் வரலாறு கூறுகின்றது. அவர் மைலாப்பூரில் அடக்கம் பண்ணப்பட்டதற்கு கல்லறை ஆதாரங்களும் உள்ளது.

1522 ஆம் ஆண்டு போர்த்துகீசியர் சென்னை வந்தபோது, அவரது கல்லறையை கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்கள் கண்டுபிடித்த பொருட்கள் மைலாப்பூரில் சாந்தோம் பேராலயத்திலேயே வைக்கப்பட்டுள்ளது. இவரின் திருப்பண்டங்கள் பலவும் 4 ஆம் நூற்றாண்டில் எடெஸ்ஸாவுக்கு(Edesta) கொண்டு செல்லப்பட்டதாக "தோமாவின் பணிகள்" என்ற நூலில் தெளிவாக கூறப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து மெசப்பொட்டேமியாவுக்கு எடுத்து செல்லப்பட்டதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. பின்னர் எடெஸ்ஸாவிலிருந்து பின்னர் அப்ரூஸ்ஸியில் உள்ள ஓர்டோனாவிற்கு(Ordon) எடுத்து செல்லப்பட்டு இன்றுவரை புனிதமாக காப்பாற்றப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

**புனித தோமையாரும் சின்னமலை புண்ணியத் தலமும், தோமையாரால் செதுக்கப்பட்ட கற்சிலுவையும்:**



இயேசு கிறிஸ்துவின் பன்னிரெண்டு சீடர்களில் ஒருவரான புனித தோமையார் இந்தியாவுக்கு பல்வேறு போராட்டங்களை ஏற்று இங்கு போதிக்க வந்தார்.அவர் போதனை செய்த இடங்களில் மிக முக்கியமானது சென்னை சைதாப்பேட்டையிலுள்ள சின்னமலை ஆரோக்கிய அன்னை திருத்தலம் ஆகும்.

சின்னமலை, பாரத மண்ணுக்கே இயேசுவின் விழுமியங்களை இன்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. புனித தோமையாரின் புண்ணான கால்கள் அழுந்திப் பதிந்து உரமேறிய ஞான பூமி இந்த புண்ணிய பூமி.

**புனிதர் வசித்த குகை :**

இங்கு அமைந்துள்ள சிற்றாலயத்தின் அடியில் ஒருவர் மட்டுமே நுழையக்கூடிய குறுகலான வாசலில் குனிந்து கொண்டே சென்றால் புனிதரின் முழு உருவ சொரூபம் நமக்கு ஆசி கூறி நிற்பதை காணலாம்.சற்று வலப்பக்கம் திரும்பினால் சிறு துவாரத்தை நாம் காணலாம்.

பகைவர் தன்னைக் கொல்ல வருவதை அறிந்ததால் அங்கிருந்து பரங்கிமலை எனவும் தோமையார் மலை எனவும் அழைக்கப்படும் மலைக்குத் தப்பி சென்றார். கிறிஸ்தவர்கள் இன்றும் சாட்சியாக பகரும் **"என் ஆண்டவரே, என் தேவனே"** என்னும் அமுத மொழிகளை (யோவான் 20;28) வெளியிட்டவர்.

**இன்றும் வற்றாத நீரூற்று**

குகையின் பின்பக்கம் சற்று உயரத்தில் தோமையார் போதனை செய்கையில் தாகத்தோடு வந்த மக்களுக்காக தன் கோலால் தட்டி உருவாக்கிய வற்றாத நீரூற்றை நாம் காணலாம். தன் கையாலேயே செதுக்கிய கற்சிலுவை இன்றும் சாட்சியாய் நிற்கிறது. அதைச் சுற்றிலும் அவர் கால் தடங்களும் உள்ளங்கை தடங்களும் இன்றும் அவரின் வருகையை உறுதி செய்கின்றன.

### புண்ணிய பூமி

இயேசு கிறிஸ்துவின் இறப்பின் நிகழ்வுகளைச் சித்தரிக்கும் சிலுவைப்பாடுகள் அனைத்தும் அருமையாக வடிவமைக்கப்பட்டுள்ளதை நாம் காணலாம்.இயேசுவின் மலைப் பிரசங்கத்தை ஒத்த சிறு சிறு குன்றுகள் தோமையாரின் உயர்ந்த லட்சியங்களையும் கொள்கை பிடிப்பையும் பறைசாற்றுகின்றன.

### அழகிய வட்ட வடிவ தேவாலயம்

இங்கு அன்பு,கனிவு,அருளை வாரிவழங்கும் ஆரோக்கிய மாதாவுக்கு ஆறு பிரமாண்ட தூண்களை கொண்ட வட்ட வடிவத் தேவாலயம் காண்பதற்கு அருமையாய் அமைந்துள்ளது.

இன்றுவரை புனித தோமையாரின் புண்ணிய தலங்களான **தோமா மலை, சாந்தோம் பேராலயம், தோமா கல்லறைக்கு வருகைதரும் உள்நாட்டு, வெளிநாட்டு பக்தர்கள் சின்னமலை புண்ணிய பூமியையும்** தரிசித்து அற்புத வரங்கள் பெற்று செல்கின்றனர்.

**செபம்:**

**எல்லாம் வல்ல தந்தையே! புனித தோமா நீரே என் ஆண்டவர் என்று ஏற்றுக்கொண்டதுபோல, நாங்களும் உம்மை எம் வாழ்வில் ஏற்று, பாதுகாவலாக கொண்டு, உம்மில் எம் வாழ்வை பயணமாக்க வரம் தாரும்.**

**.....ஆமென்**